**உதவி இயக்குநர், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், திண்டுக்கல் அவர்களின் செயல்முறை ஆணைகள்**

பிறப்பிப்பவர் : திருமதி.ச.பிரபாவதி, பி.எஸ்.சி., எம்.பி.ஏ.,
உதவி இயக்குநர்
இடம் : திண்டுக்கல்.

**செ.மு.ஆ. எண் : அ1/2070/ 2024, நாள் : 26.07.2024**

பொருள்: பணியமைப்பு - வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை வேலைவாய்ப்புப் பிரிவு - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி IVஇல் அடங்கிய இளநிலை உதவியாளர் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டோர் பட்டியல் பெறப்பட்டு சார்நிலை அலுவலகங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டமை - தற்காலிகப் பணியினை வரன்முறை செய்தல் - தொடர்பாக.

பார்வை:
1. செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் கடிதம் எண்: 1939/PSD-D2/2023, நாள் : 04.09.2023.
2. இணை இயக்குநர், (வேலைவாய்ப்பு) வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, கிண்டி, சென்னை-32 அவர்களின் செயல்முறை ஆணைகள் எண்: நிர்2/13013/2023, நாள்: 10.10.2023.
3. உதவி இயக்குநர், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், திண்டுக்கல் அவர்களின் செயல்முறை ஆணைகள் எண்: அ1/2751/2023, நாள் :11.10.2023.
4. திரு. மு.கார்த்திகேயன், இளநிலை உதவியாளரின் பணியேற்புக் கடிதம், நாள் : 13.10.2023.

-------------------------

**ஆணைகள் :**

பார்வை (2)-இல் காணும், இணை இயக்குநர், (வேலைவாய்ப்பு) வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, கிண்டி, சென்னை-32 அவர்களின் செயல்முறை ஆணைகளின்படி, இவ்வலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை(3)-இல் காணும், உதவி இயக்குநர், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், திண்டுக்கல் அவர்களின் செயல்முறை ஆணைகளின்படி, திண்டுக்கல் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய அலுவலகத்தில் தற்காலிக இளநிலை உதவியாளராக நியமனம் செய்யப்பட்ட திரு.மு.கார்த்திகேயன் அவர்களது பணி இளநிலை உதவியாளர் பதவியில் 13.10.2023 அன்று முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தப்படுகிறது.

இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்குள் இரண்டாண்டு தொடர்பணி செய்து தகுதிகாண் பருவத்தினை இளநிலை உதவியாளர் பதவியில் முடித்திட வேண்டும் எனஆணையிடப்படுகிறது.

திரு. மு.கார்த்திகேயன், இளநிலை உதவியாளர் அவர்களின் பணிவரன்முறை உயர்நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள ரிட் மனுக்களின் மீது பிறப்பிக்கப்படவுள்ள இறுதி ஆணைகளுக்கு உட்பட்டதாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்செயல்முறை ஆணைகளைப் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகை தொடர்புடைய பணியாளரால் உடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

26.07.2024
உதவி இயக்குநர்,
மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும்
தொழில்நெறி வழிகாட்டும் மையம்,
திண்டுக்கல்.

26.7.24